# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ     அதி விசேஷமானது

අංක 2273/73 - 2022 මාර්තු මස 31 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.03.31
*2273/73 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் காணி அமைச்சர் சமரகோன் முதியன்சேலாகே சந்திரசேன ஆகிய நான், இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில், மினுவங்கொடை பிரதேச செயலாளர் பிரிவில், இல. 125/2 மினுவங்கொடை வடக்கு கிராம அலுவலர் பிரிவில் எமடேமுல்லை கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் 2020.09.04 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. GA/MIN/2020/343 இல் குறிப்பிடப்படும் காணித்துண்டின் எல்லைகள் :

01. **துண்டு A - கோன்கஹவத்தை அல்லது கோன்கஹ வத்தே - விஸ்தீரணம் : 0.0254 ஹெக்டயார்**

வடக்கு : ஓடையால் வேறாக்கப்பட்ட நிலம் மற்றும் வெட்டப்பட்ட கான் மற்றும் வீதி ; கிழக்கு: ஓடையால் வேறாக்கப்பட்ட நிலம், வெட்டப்பட்ட கான் மற்றும் வீதி (வீ.அ.அ.); தெற்கு : வீதி (வீ. அ. அ.) மற்றும் இக்காணியின் எஞ்சிய பகுதி ; மேற்கு: இக்காணியின் எஞ்சிய பகுதி மற்றும் ஆரம்ப பட வரைபு இல. GA/MIN/2020/342.

கம்பஹா, அத்தனகல்லை மற்றும் மினுவங்கொடை ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் மினுவங்கொடை பொறுப்பதிகாரி அலுவலக காணிக்கு உட்புகும் பிரவேசப் பாதையை நிர்மாணிப் பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள காணிப் பரப்பின் உரிமையை பெற்றுக் கொள்ளல்.

எஸ்.எம். சந்திரசேன,
காணி அமைச்சர்.

எனது இல. : 4-3/18/2019/WS/525.
காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
இல.1200/6, ரஜமல்வத்தை வீதி,
2022, சனவரி 15.

EOG 03 - 1092